சி.சி. எண்.71/2020 19 .10.2020

அ.சா.2 சாட்சி.திரு.சண்முகம்

மு.விசாரணை.

நான் குரங்குசாவடியில் வசித்து பொதுப்பணி துறையில் செயற்பொறியாளராக பணிபுாிந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன கணேசன் எனது தம்பி. 17.12.2018-ம் தேதி இரவு 10.00 மணிக்கு அ.சா.1 எனக்கு போன் செய்து தாரமங்கலம் ரோட்டில் உள்ள செங்கல் சூளை அருகே லாாி மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார். நான் மணிபால் மருத்துவமனை சென்று பார்த்தேன். கணேசனுக்கு தலையில் பலத்த அடிப்பட்டும், காலிலும் அடிப்பட்டும் இருந்தது. மணிபால் மருத்துவமனையில் இருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். மறுநாள் காலை 11.00 மணியளவில் சிகிச்சை பலனளிக்காமல் கணேசன் இறந்து விட்டார். கணேசனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை முடியும் வரை நான் அங்கிருந்தேன். போலீசார் என்னை விசாாித்தார்கள்.

எதிாி தரப்பில் குறுக்கு விசாரணை.

விபத்து குறித்து நேரடியாக எதுவும் எனக்கு தொியாது. விபத்தில் இறந்து போன கணேசன் எனது உடன் பிறந்த சகோதரன் . விபத்தானது யாருடைய அஜாக்கிரதையினால் ஏற்பட்டது என்று எனக்கு தொியாது என்றால் சாிதான்.

மறு விசாரணை.இல்லை.

ஒம்/-சண்முகம்

ஒம்/-ஆ.சீதாலெட்சுமி
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.